பத்திரிக்கை செய்தி

சமூகப்பாதுகாப்புத்துறை

**அரசினர் குழந்தைகள் இல்லம் - விழுப்புரம்.**

அரசாணை எண்: 50, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, நாள்: 28.12.2020-யின் படி தமிழ்நாடு அரசு சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் 30 அரசு குழந்தைகள் இல்லத்தில் தங்கியிருக்கும் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் பெற்ற நபர்கள் அவர்களது விண்ணப்பங்களை உரிய சான்றின் ஒளி நகலுடன், இச்செய்தி வெளியிட்ட 10 நாட்களுக்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வல்லுநர்கள் கொண்ட தேர்வு குழு மூலம் நேர்முக தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் (ஒரு வருடத்தில் 60 நாட்களுக்கு மிகாமல்/வாரம் ஒரு முறை) மதிப்பூதிய அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வழங்கப்படும். மேலும், விவரம் வேண்டுவோர் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கபட வேண்டிய முகவரி**

அரசினர் குழந்தைகள் இல்லம்,
சர்வேயர் நகர்,
சாலாமேடு,
விழுப்புரம் - 605 401.
தொலைப்பேசி எண்: 9841682101

மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்

2/1/21

2/2